# பாட்டாளி சிந்தனை

Volume 34 No 7


சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

March 2024

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் விலை ரூ 5

# பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்களை நினைவு கூர்வோம்!




5 மே 1818 - 14 மார்ச் 1883

*முதலாளித்துவ உற்பத்திக்கு உண்மையான தடையாக இருப்பதே மூலதனம்தான். அந்த மூலதனமும் அதன் சுய விரிவாக்கமும் தான் அதன் ஆரம்ப புள்ளியாகவும் இறுதி புள்ளியாகவும், உற்பத்தியின் நோக்கமாகவும் தோன்றுகிறது; மூலதனத்தை மேலும் உருவாக்கு வதற்காகதான் அந்த உற்பத்தியே செய்யப்படுகிறது, உற்பத்திக்காக மூலதனம் முதலீடு செய்யப்பட வில்லை, உற்பத்தி சாதனங்கள் என்பது சமுதாயத்திலுள்ள உற்பத்தி செய்யும் தொழிலாளர் களின் வாழ்வாதாரத்தை தொடர்ந்து விரிவாக்கு வதற்காக அல்ல.*

*உற்பத்தியில் ஈடுபடும் பெருவாரியான மக்களின் உழைப்பை அபகரித்து ஏழைகளாக்கும் வரம்புகள்தான் உயர்ந்து கொண்டே இருக்கும், இந்த வரம்புகள் மூலதனம் தனது நோக்கங்களுக்காக பணியமர்த்தப்பட்ட உற்பத்தி முறைகளோடு தொடர்ந்து மோதிக்கொண்டே இருக்கும். சமூக உற்பத்தி திறனின் தங்குதடையற்ற வளர்ச்சிக்கு முதலாளித்துவ உற்பத்தி வரம்பு பெருந்தடையாக அமையும்.*

**காரல் மார்க்ஸ்**

*(மூலதனம் தொகுதி 3, பகுதி 3, அத்தியாயம் 5)*



18 டிசம்பர் 1878 - 5 மார்ச் 1953

*ஒரு சரியான அரசியல் வழி முதலானதும் முக்கியமானதும் தான். ஆனால் அதுவே போது மானதாகாது. ஒரு அறிவிப்பு என்ற வகையில் சரியான அரசியல் வழி அவசியமே. ஆனால் அவ்வழி திறம்பட எடுத்துச் செல்லப்படவேண்டும். அந்த சரியான அரசியல் வழியை திறம்பட எடுத்துச் செல்ல கட்சியின் வழியை புரிந்து கொண்ட, தங்கள் சொந்த வழியிலேயே ஏற்றுக்கொண்ட, திறம்பட எடுத்துச்செல்ல தயாராயுள்ள, நடைமுறையிலும் பதில் சொல்லவும் அவ்வழியை ஆதரிக்கவும் அதற்காக போராட வும் திறனுள்ள தொண்டர்கள் நமக்குத் தேவை. இல்லையென்றால் ஒரு சரியான அரசியல் வழியும்கூட பெயரளவிலானதாக தாழ்ந்துவிடும்.*

**ஸ்டாலின்**

*(சிபிஎஸ்யு (போல்ஷிவிக்)ன் 18வது காங்கிரஸுக்கான அறிக்கை)*

# பொதுக் கல்வியைப் பாதுகாக்க வலியுறுத்தியும், தேசிய கல்விக் கொள்கை – 2020ஐ எதிர்த்தும் தென்னிந்திய மாணவர் மாநாடு

பொதுக்கல்வியைப் பாதுகாக்க வலியுறுத்தியும் தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020ஐ எதிர்த்தும் அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO) தென்னிந்திய மாணவர் மாநாட்டை 17.02.2024 சனிக்கிழமை அன்று சென்னை, சர் பிட்டி தியாகராயர் அரங்கில் நடத்தியது.

மத்திய அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டு பல்வேறு மாநில அரசாங்கங்களால் அமல்படுத்த பட்டுவரும் தேசிய கல்விக்கொள்கை 2020க்கு எதிராக ஏற்கெனவே வடக்கு, கிழக்கு, மேற்கு மண்டல மாணவர் மாநாடுகளை நடத்திய பிறகு தற்போது சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய மாணவர் மாநாட்டிற்கு ஏஐடிஎஸ்ஓ பொதுச் செயலாளர் சௌரவ் கோஷ் தலைமை வகித்தார். விவேகானந்தா கல்லூரி, வரலாறு துறை மேனாள் துறைத்தலைவர் பேரா கருணாநந்தன், ஜெஎஸ்எஸ் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேரா ஜவஹர் நேசன், கேரளா கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான மாநில கவுன்சில் மேனாள் ஆராய்ச்சி அலுவலர் கே வி மானோஜ், உஸ்மானியா பல்கலைக்கழக பேரா நாகேஸ்வர ராவ் அமாஞ்சி, ஆந்திர மாநில மனித உரிமை அமைப்பின் தலைவரும் முன்னாள் கல்லூரி முதல்வருமான பேரா சந்திரசேகர், ஏஐடிஎஸ்ஓ தலைவர் வி என் ராஜசேகர் ஆகியோர் உரையாற்றினர்.

இந்த தேசிய கல்விக் கொள்கை மனிதனை மனிதனாக்குவதற்கு மாறாக இந்திய கார்ப் பொரேட்டுகளுக்கு அடிபணிந்து சேவகம் செய்யும் இயந்திரங்களாக மாணவர்களை உருவாக்க எத்தனிக்கிறது. சிந்தனைத் திறனற்றவர்களாகவும், குருட்டுத்தனத்திற்கு பலியாபவர்களாகவும்

தொடர்ச்சி 2ம் பக்கம்






**சென்னையில் நடைபெற்ற மாநாட்டில் மேடையில் பேரா கருணானந்தன், பேரா ஜவஹர் நேசன், திரு சௌரவ் கோஷ், திரு ராஜசேகர், திரு வால்டேர் மற்றும் மாணவர் பிரதிநிதிகள்**

# விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூட்டை கண்டித்து அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் பிப்ரவரி 23 கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம்

பஞ்சாப், ஹரியாணா எல்லையில், விவசாயிகள் போராட்டத்தின் மீது, நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில், 24 வயது இளம் விவசாயி உயிரிழந்து உள்ளார்; 15 விவசாயிகள் படுகாயம் அடைந்திருக்கின்றனர். இவரையும் சேர்த்து இதுவரை 4 விவசாயிகள் உயிர் இழந்து உள்ளனர்.

மத்திய பாஜக மோடி அரசாங்கத்தின் இந்த கொலைவெறி ஆட்டத்தைக் கண்டித்து நாடு முழுவதும் உள்ள அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்கள், தர்ணாக்கள், ஊர்வலங்கள் நடத்த வேண்டும் என்று எஸ்கேஎம் அறைகூவல் விடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை, சேலம், விழுப்புரம், மதுரை, திண்டுக்கல், தேனி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர் சங்கம், அகில இந்திய யுனைடெட் டிரேட் யூனியன் சென்டர் கலந்துகொண்டன ■



சேலம்




விழுப்புரம்




தேனி




திண்டுக்கல்

## பரந்தூர் விமான நிலைய நில எடுப்பு அலுவலகம் திறக்கப்பட்டதை எதிர்த்த விவசாயிகள் கைது செய்யப்பட்டதற்கு ஏஐகேகேஎம்எஸ் கண்டனம்

*ஏஐகேகேஎம்எஸ்ன் தமிழ்நாடு மாநிலக் கமிட்டி பிப்ரவரி 26, 2024 அன்று வெளியிட்ட அறிக்கை:*

பரந்தூர் விமான நிலைய திட்டத்திற்கான நில எடுப்பு அலுவலகம் திறக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடிய அப்பகுதி விவசாயிகளும் பொதுமக்களும் கைது செய்யப்பட்டது வன்மையாக கண்டிக்கத் தக்கதாகும்.

இரண்டாவது விமான நிலையம் அமைக்க விளைநிலங்களையும் நீர்நிலைகளையும் அழிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து 500 நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து போராடி வருகின்றனர். அம்மக்களது போராட்டம் மிகவும் நியாயமானதாகும். மேலும் வளர்ச்சி திட்டங்களுக்காக விவசாய நிலங்கள் அழிக்கப்படாது என திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிக்கு நேர் விரோதமாக ஆட்சிக்கு வந்தபின் செயல்படுகிறது. எனவே கைது செய்யப்பட்ட பரந்தூர் பகுதி விவசாயிகளையும் பொது மக்களையும் உடனே விடுதலை செய்வதோடு பரந்தூர் விமான நிலையம் அமைப்பதற்கான திட்டத்தையும் உடனடியாக கைவிடவேண்டு மென ஏஐகேகேஎம்எஸ் தமிழக அரசாங்கத்தை வலியுறுத்துகிறது ■

# பொதுக்கல்வியைப் பாதுகாக்க வலியுறுத்தி . . .

*1ம் பக்கத் தொடர்ச்சி*

மாணவர்களை உருவாக்குவதற்காக இந்திய அறிவியல் அமைப்பு என்ற பெயரில் கலவாதி யாகிப்போன பழமைவாதத்தை, உண்மைக்கு மாறானவற்றை வரலாறு என்று புகுத்துகின்றனர். அறிவியல்பூர்வ, ஜனநாயகபூர்வ, மதச்சார்பற்ற அனைவருக்குமான கல்வி என்ற இந்திய மாமனிதர்களின் கனவுக்கு எதிராக உள்ள தேசிய கல்விக் கொள்கை 2020 மனித நாகரீகத்திற்கே எதிராக செல்கிறது என்பதால் அதனை முறியடிக்க கல்வியை நேசிப்பவர்கள், குறிப்பாக மாணவர்கள் நாடுதழுவிய ஒருங்கிணைந்த போராட்டத்தை தீவிரப்படுத்துவோம் என்று உறுதியேற்றனர்.

இதில் ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தெலுங்கானா, பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலிருந்து 700க்கும் மேற்பட்ட மாணவர்களும் கல்வியாளர்களும் கலந்து கொண்டு தேசிய கல்விக்கொள்கை 2020 குறித்து விவாதித்தனர்.

தேசிய கல்விக்கொள்கை 2020க்குப் பதிலாக மதச்சார்பற்ற அறிவியல்பூர்வ ஜனநாயகபூர்வ கல்வியை அறிமுகப்படுத்தவேண்டும், கல்விக்கு மத்திய பட்ஜெட்டில் குறைந்தது 10%, மாநில பட்ஜெட்டில் 30% ஒதுக்க வேண்டும், கல்விக் கொள்கை வகுப்பதற்கு முன்பாக அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் நன்கறியப்பட்ட கல்வியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களுடன் ஜனநாயகபூர்வ விவாதம் நடத்தவேண்டும், ஆசிரியர்கள் மாணவர்களின் ஜனநாயக உரிமைகளையும் கல்விநிறுவனங்களின் தன்னாட்சியையும் பறிப்பதற்காக அதிகாரத்தை மத்தியில் குவிக்காதே, பாடப்புத்தகங்களில் வரலாற்றை திரிப்பதையும், நமது நாட்டின் மாபெரும் மனிதர்களின் வாழ்க்கைப் போராட்டங் களையும் நீர்த்துப்போக செய்யும் நடவடிக்கை யையும் உடனே நிறுத்தவேண்டும், இணைப்பு என்ற பெயரில் அரசு பள்ளிகளை மூடக்கூடாது. அரசு கல்வி நிறுவனங்களில் காலியாக உள்ள அனைத்து ஆசிரியர் மற்றும் அலுவலர் பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன ■

## எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி பிப்ரவரி – 24 போருக்கு எதிரான தினம் நாடு முழுவதும் அனுசரித்தது




கொல்கத்தா, மேற்கு வங்கம்



ஹைதராபாத், தெலுங்கானா

# தேனியில் வேலையின்மைக்கெதிராக மத்திய, மாநில அரசாங்கங்களைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்




மத்திய, மாநில அரசாங்கங்கள் காலிப் பணியிடங்களை நிரப்பக்கோரி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தோழர் பாண்டி மாநிலக் கமிட்டி உறுப்பினர் உரை

## மார்ச் 23 பகத்சிங் நினைவுதினத்தை அனுசரிப்போம்!



இந்திய விடுதலைப் போராட்டத்தின் சமரச மற்ற போராட்டத் தியாகி பகத் சிங் 1931ஆம் ஆண்டு மார்ச் 23 அன்று தூக்கிலிடப்பட்டார். “புரட்சி, மனித குலத்தின் பிரிக்க முடியாத உரிமையாகும்; சுதந்திரம் அனைவரின் அழிக்க முடியாத பிறப்புரிமையாகும்” என்ற அவரது வாசகங்கள் இன்னும் நம் மனதில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. பகுத்தறிவை மட்டுமே தன் வாழ்க்கைப் பாதையாக அமைத்துக் கொண்டார். அவரது வாழ்க்கையை இன்றைய மாணவர் மற்றும் இளைஞர்களிடம் வெகுஜன அமைப்புகள் எடுத்துச் சென்று மிகச் சிறந்தவகையில் பகத்சிங் நினைவுதினத்தை அனுசரிக்க வேண்டும் ■

# மக்கள் நலனுக்கான தேர்தல் அணுகுமுறை

**[நாடாளுமன்றத் தேர்தல் கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நாடு முழுவதும் எமது கட்சி எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) தேர்தலில் களமிரங்கவிருக்கிறது. மக்கள் வாழ்க்கையின் அடிப்படைப் பிரச்சினைகளை தேர்தல் மூலம் ஒருபோதும் தீர்க்க முடியாது என எங்களின் கட்சி நம்புகிறது. அதற்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்காக வலிமையான போராட்டங்களை நடத்தி மக்கள் போராட்டக் கமிட்டிகளை மக்களின் சொந்த அரசியல் அதிகார அமைப்புகளாக உருவாக்க வேண்டும். அதுவரை, தேர்தலிலும் மக்கள் இயக்கத்தின் ஒரு பகுதியாக பங்கேற்று மக்களவைகளில் போராட்டக் குரலை எதிரொலிக்க வேண்டும். இதுவே மார்க்சிசம், லெனினிசம், சிப்தாஸ் கோஷ் சிந்தனையாகும். இதன் அடிப்படையில் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் 2018 நவம்பர் 26 அன்று ஜாம்ஷெட்பூரில் ஆற்றிய உரை 'மக்கள் நலனுக்கான தேர்தல் அணுகுமுறை என' புத்தகமாக வெளியிடப்பட்டு அமோக வரவேற்பைப் பெற்றது. அதன் சில பகுதிகளை இங்கு பிரசுரிக்கிறோம்.]**

## நாட்டில் நிலவும் அச்சந்தரும் காட்சிகள்

*1952ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பல பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன. வறுமையை ஒழிப்போம் (கரிபி ஹட்டாவோ) எனும் கோஷத்துடன் காங்கிரஸ் கட்சி நீண்ட காலம் ஆட்சி செய்தது. நல்ல நாட்களைக் கொண்டுவருவோம் (அச்சா தின்) எனும் வாக்குறுதியுடன் பாஜகவும்கூட அதிகாரத்திற்கு வந்தது. விளைவு என்னவாக இருந்தது என்பதை உங்களின் கசப்பான சொந்த அனுபவத்தின் மூலம் நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். ஒவ்வொரு நாளும் தாங்வொணாத் துயரங்களை நீங்கள் சந்தித்துக்கொண்டிருக்கின்றீர்கள். இந்த அனைத்துக் கட்சிகளும் அவை ஆண்டபோது மிக அதிக முன்னேற்றமும் வளர்ச்சியும் இருந்தது என்றும், வருங்காலத்தில் அது இன்னும் அதிகமாக இருக்கும் என்றும் கூறிக் கொண்டிருக்கின்றன. ஆனால் நாட்டில் நாம் காண்கின்ற காட்சி எத்தகையதாக இருக்கின்றது?*

*… இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 20.3 கோடி மக்கள் பசியால் வாடுகின்றனர். ஒவ்வொரு நாளும் பட்டினியால் 7,000 பேர் இறக்கின்றனர். இதுவரையில், 3.5 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர். மருத்துவச் சிகிச்சை கிடைக்காமல் ஒவ்வொரு நாளும் 10,000 பேர் சாகின்றனர். தினமும் 3,000 குழந்தைகள் ஊட்டச் சத்தின்மையால் மடிந்து கொண்டிருக்கின்றனர். நாட்டின் 123 கோடி ஒட்டுமொத்த மக்கட்தொகையில் கிட்டத்தட்ட 70 கோடி பேர் வேலையின்றி திண்டாடிக்கொண்டிருக்கின்றனர். சில தினங்களுக்கு முன்பாக, இரயில்வே துறை 90,000 காலிப் பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அப்பதவிகளுக்கு 2.8 கோடி வேலையற்ற இளைஞர்கள் விண்ணப் பித்திருக்கின்றனர். நாட்டு மக்களின் அபாயகர நிலைமையை சற்றே நினைத்துப் பாருங்கள்! இது நாட்டின் ஒருபக்கத் தோற்றமே.*

## இத்தனையாண்டு காலத்தில் முன்னேற்றமடைந்திருப்பது யார்?

*இத்தனையாண்டுகளில் முன்னேற்றமேதும் ஏற்படவில்லையா? ஆம், முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. தொழிலதிபர்களும் வணிகர்களும் பெரும் செல்வத்தைக் குவித்திருக்கின்றனர். 2016இல் 1 சதவீத பகாசுரப் பணக்காரர்கள்* (Super rich) *நாட்டின் ஒட்டுமொத்த செல்வத்தில் 51 சதவீதத்தை வைத்திருக்கின்றனர். அது, இரண்டு ஆண்டுகளுக்குள், நாட்டின் செல்வத்தில் 73 சதவீதமாக அதிகரித்து அந்த 1 சதவீத பகாசுரப் பணக்காரர்களின் கைகளில் குவிந்திருக்கிறது. நாட்டு மக்கள் 90 சதவீதத்தினரின் செல்வத்திற்கு சமமான செல்வத்தை மிகப்பெரிய பணக்காரர்கள் 57 பேர் மட்டுமே கொண்டிருக்கின்றனர். தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் செல்வம் 2018, ஜூலை 31 நிலவரப்படி ரூபாய் 3,71,000 கோடிகளாக உயர்ந்திருக்கிறது. திலிப் சங்வி என்கின்ற மற்றொரு பெரும் ஏகபோக பணக்காரர் 1,28,122 கோடிகளைச் சேர்த்திருக்கிறார். கௌதம் அதானி மற்றும் அஸிம் ப்ரேம்ஜி என்கின்ற இரண்டு முன்னணித் தொழிலதிபர்களின் நிகர சொத்து மதிப்பு முறையே ரூபாய் 1,70,230 மற்றும் 1,30,251 கோடிகளாகும். பாஜகவின் தலைவர் அமித் ஷாவின் சொத்து 300 சதவீதமாக அதிகரித்திருக்கிறது. அவரது மகன் ஜாய் ஷா வைத்திருக்கும் நிறுவனத்தின் வருமானம் ஒரே ஆண்டில் 16,000 மடங்கு உயர்ந்து ரூபாய் 50,000லிருந்து ரூபாய் 80 கோடிகளாகத் தாவியிருக்கிறது. காவியுடையில் இருக்கும் பாபா ராம்தேவ்–இன் சொத்தும்கூட 173 சதவீதம் அதிகரித்திருக்கிறது. இவர்களுடன், மந்திரிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் என யாவரும் கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்பிலான செல்வத்தை வைத்திருக்கின்றனர்.*

*அரசாங்கம் திவாலாகிவிட்டது. ஆகவே, பற்றாக்குறை பட்ஜெட் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. பற்றாக்குறையை ஈடுகட்ட, அரசாங்கமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆதாரங்களிலிருந்து பெருமளவில் கடன் வாங்குகிறது, அனைத்து வகையிலும் மக்கள் மீது வரிச்சுமையை அதிகரித்துக் கொண்டிருக்கின்றது, விலைவாசியை உயர்த்திக் கொண்டிருக்கின்றது. பெட்ரோல் டீசல் மீதான வரிவிதிப்பின் மூலம் 2014–15, 2018–19க்கிடையில் அரசாங்கம் ரூபாய் 10 லட்சம் கோடிக்கும் மேல் ஈட்டியிருக்கிறது என்று கூறப்படுகிறது.*

*… நிதிக்கையிருப்புப் பற்றாக்குறை என்று கூறிக் கொண்டு, மத்திய அரசாங்கம் கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீட்டை குறைப்பதுடன் மக்களைப் பிழிந்தெடுத்து வியாபார அடிப்படையில் நடத்தவும் பெரும் லாபமீட்டவும் இவ்விரண்டு முக்கியத் துறைககளை தனியார்வசம் ஒப்படைத்துக் கொண்டிருக்கின்றது. வறட்சி, வெள்ளம் போன்ற பேரிடர்களைத் தடுக்க அரசாங்கம் எவ்வித முயற்சியும் எடுப்பதில்லை, பாசன வசதிகளை மேம்படுத்தவும் குடிநீர் வழங்கிடவும் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை. மாறாக, ரூபாய் 10.25 லட்சம் கோடிகள் வங்கிப் பணத்தை ஏகபோகக் குடும்பங்களும் மிகப் பெரும் கார்ப்பொரேட் நிறுவனங்களும் அபகரித்திட அரசாங்கம் அனுமதி தந்துள்ளது. இது மட்டுமல்ல. இத்தகைய ஏகபோகக் குடும்பங்களுக்கும் மிகப்பெரும் கார்ப்பொரேட் நிறுவனங்களுக்கும் ரூபாய் 2.72 லட்சம் கோடிகளுக்கும் அதிகமான, கட்ட வேண்டிய வரிப்பணத்தை தள்ளுபடி செய்திருக்கிறது. இதுவரையில் ரூபாய் 100 லட்சம் கோடிக்கும் அதிகமான கறுப்புப் பணத்தை பகாசுரப் பணக்காரர்களிடம் சேர்த்திட அனுமதித்திருக்கிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. இதுதான் இந்தியாவில் நாம் காணும் காட்சியின் மற்றொரு பக்கமாகும்.*

## இரண்டு இந்தியா

*ஆக, இங்கே இரண்டு இந்தியாக்கள் இருக்கின்றன. ஒரு இந்தியா, செல்வம் விண்ணை முட்டும் வேகத்தில் பெருகிக் கொண்டிருக்கும் மிகப்பெரும் ஏகபோகவாதிகள், பெரும் வணிகர்களைச் சேர்ந்ததாகும். மற்றொரு இந்தியாவானது பட்டினியால் செத்துக்கொண்டிருக்கும் பரம ஏழைகளைக் கொண்ட, பசியால் வாடிக்கொண்டிருக்கும், வேலையற்றவர்களைக் கொண்டிருக்கும், தற்கொலை செய்துகொண்டிருக்கும், அற்பத் தொகைக்காக குழந்தைகளை விற்றுக்கொண்டிருக்கும் கோடிக்கணக்கான பாடுபடும் மக்களைக் கொண்டதாகும். வாக்கு அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கும் தேசிய, மாநில பூர்ஷ்வா கட்சிகள் கொழுத்து செழித்து வளர்ந்து கொண்டிருக்கும் பகாசுரப் பணக்காரர்களின் பக்கம் உள்ளனரா அல்லது வறுமை மற்றும் துயரம் பீடித்துள்ள எண்ணற்ற நாட்டு மக்கள் பக்கம் உள்ளனரா என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். …*

## அதிகரித்துவரும் வேலையின்மை, வறுமை மற்றும் துயரம் நிறைந்த இந்தியா

*இன்று, நாட்டில் கோடிக்கணக்கான வேலையற்றோர் உள்ளனர். கோடிக்கணக்கான தொழிலாளர்கள் ஆட்குறைப்புக்கு உள்ளாகின்றனர். புதிய வேலை வாய்ப்புகள் ஏதும் உருவாக்கப்படவில்லை. தொழிற்சாலை வாயிற் கதவுகள் மூடப்பட்டுவருகின்றன. சந்தை இல்லாததால் தொழிற்சாலைகள் மூடப்பட்டுக்கொண்டிருப்பதாக ஆளுவோர் வாதிடுகின்றனர். அமர்த்தப்பட்டிருக்கும் சொற்ப எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் நிரந்தர அடிப்படையில் அல்லாமல் ஒப்பந்த அடிப்படையில்தான் வேலை செய்கின்றனர். நிர்ணயிக்கப்பட்ட வேலை நேரம் கிடையாது, நிலையான ஊதியம் கிடையாது. ஒப்பந்தத் தொழிலாளர் என்கின்ற புதியமுறை செயல் பட்டுக்கொண்டிருக்கின்றது. தொழிலாளர் சட்டம் என எதுவும் கிடையாது, வேலை பார்க்கும் இடங்களில் தொழிலாளர் உரிமை என எதுவும் கிடையாது.*

*கிராமங்கள் பாலைவனங்களைப் போலக் காட்சியளிக்கின்றன. வேலை, வாழ்வாதாரம் ஏதும் இல்லாததால் கிராமப் பகுதிகளில் ஆண்கள் பெண்கள் என இளைஞர்கள் எவரும் இல்லை. ஆக, ஏதோவொரு நகரத்திற்கு புலம் பெயர்ந்து சென்றுகொண்டிருக்கின்றனர், 'புலம் பெயர்ந்த தொழிலாளர்களாக' அவர்கள் வெளிநாடுகளுக்கும்கூடச் சென்றுகொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு நிலையான வேலை எங்குமே கிடையாது. இந்த நாட்டின் 3 கோடி இளைஞர்கள் செல்வாக்குமிக்கவர்களின் ஏஜெண்டுகளால் அடிமைத் தொழிலாளர்களாக, வேலை ஆசை காட்டி வெளிநாடுகளில் விற்கப்படுகின்றனர் என்பது உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். இத்தகைய அடிமைத் தொழிலாளர்கள் தாய்நாடு திரும்ப அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் நாள் முழுவதும் வேலை செய்யவைக்கப்படுகிறார்கள், அவர்கள் உயிர்வாழ்வதற்கான உணவு மட்டுமே வழங்கப்படுகிறது. ஊதியம் தருவதற்கான எவ்வித உத்தரவாதமும் அவர்களுக்குக் கிடையாது. அவர்கள் குடியிருக்கும் இடங்களிலிருந்து வெளிவருவதற்குக்கூட அவர்கள் அனுமதிக்கப் படுவதில்லை. தாங்வொணா வறுமை இந்நாட்டின் 3 கோடி இளைஞர்களை அயல் நாட்டில் அடிமைகளாக எப்படி வாழவைத்திருக்கிறது என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்!*

*வேலை தருகிறோம், திருமண ஏற்பாடு செய்து தருகிறோம் என்ற வாக்குறுதியுடன் ஆயிரக் கணக்கான கிராமத்துப் பெண்களை ஒரு வியாபாரிகள் கூட்டம் ஆசை வார்த்தைகள் காட்டி வசப்படுத்திக் கொண்டிருக்கின்றது. துரதிர்ஷ்டவசமான அப்பெண்களை பின்னர் அவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விபச்சாரச் சந்தையில் விற்கின்றனர். இந்த சதை வர்த்தகம் நாளுக்கு நாள் வேகமாக வளர்ந்துகொண்டிருக்கின்றது. இது நம் நாட்டின் 'வளர்ச்சியின்' மற்றுமொரு அதிர்ச்சியளிக்கக் கூடிய தோற்றமாகும்.*

*… காங்கிரஸ் கட்சி இந்நாட்டில் நீண்ட காலமாக ஆட்சி புரிந்தது. இப்போது பாஜக ஆட்சியதிகாரத்திற்கு வந்திருக்கிறது. நாட்டு மக்களுக்கு இவ்விரண்டு கட்சிகளும் இந்த 'வளர்ச்சியை'த்தான் தந்திருக்கின்றன. இவை ஒடுக்கப்பட்ட மக்களின் கடைசிச் சொட்டு ரத்தத்தையும் பிழிந்தெடுத்து எண்ணற்ற லாபத்தை அறுவடை செய்துகொண்டிருக்கும் பெரும் தொழிலதிபர்கள் மற்றும் பெரும் வணிகர்கள் வளம் பெறுவதை மட்டுமே உத்திரவாதப் படுத்தியிருக்கின்றன. இந்த வகையான சுதந்திரத்தைக் காணவா தியாகி பகத்சிங் தன் உயிரை மாய்த்துக் கொண்டார்? ஆயிரக்கணக்கான பிரகாசமான இளைஞர்கள் இத்தகைய ஓர் சுதந்திர இந்தியாவை உருவாக்கத்தான் தியாகம் புரிந்தனரா? இந்த விடுதலையை அடையத்தான் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் போராடினாரா?*

## அரசியலில் இரண்டு சக்திகள் மட்டுமே உள்ளன

*சுதந்திரத்திற்குப் பிறகு ஆங்கிலேய ஏகாதிபத்தியம் இருந்த இடத்தில், ஓர் ஒடுக்குமுறை முதலாளித்துவ ஆட்சி இந்நாட்டில் நிறுவப்பட்டிருக்கிறது. இதனை எங்களது மரியாதைக்குரிய தலைவரும், ஆசானுமான தோழர் சிப்தாஸ் கோஷ் சுட்டிக் காண்பித்திருக்கிறார். மக்கள் சுதந்திரம் அடையவில்லை, ஆனால் மக்களை தங்கள் இஷ்டம்போல் கொள்ளையடிக்கவும் சுரண்டவும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில முதலாளிகள் சுதந்திரம் பெற்றிருக்கின்றார்கள். இவ்வாறாக, இந்திய சமுதாயம் இரு வர்க்கங்களாகப் பிளவுபட்டிருக்கிறது என்பதை அவர் சுட்டிக்காண்பித்தார்.*

தொடர்ச்சி 4ம் பக்கம்

## மக்கள் நலனுக்கான தேர்தல் அணுகுமுறை . . .

# இத்தனையாண்டு காலத்தில் முன்னேற்றமடைந்திருப்பது யார்?

*3ம் பக்கத் தொடர்ச்சி*

... வெளிப்படையாகப் பார்த்தால், அரசியலில் பல்வேறு எதிர் எதிர் சக்திகள் இருப்பதாகத் தோன்றும் என்பதையும் சிப்தாஸ் கோஷ் சுட்டிக்காண்பித்தார். ஆனால், யதார்த்தத்தில் அரசியலில் இரண்டு எதிர் எதிர் சக்திகள் மட்டுமே இருக்கின்றன. ஒன்று பெரும் தொழிலதிபர்களுக்கும் வணிகர்களுக்கும் நம்பகமாக சேவை செய்துகொண்டும், அவர்கள் பெரும் கொள்ளையடிப்பதற்கும் சுரண்டுவதற்கும் உடந்தையாக இருந்துகொண்டும் அடக்குமுறை யாளர்களை மற்றும் கொள்ளையடிப்பவர்களைப் பாதுகாத்து கொண்டும் இருக்கின்ற சக்தியாகும். காங்கிரஸ், பாஜக முதல் பிற மாநிலக் கட்சிகள் வரை அனைத்துமே இதே அரசியலைத் தான் செய்கின்றன.

மற்றொன்று, ஈவிரக்கமற்ற முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கு எதிரான மக்களின் போராட்டங்களைக் கட்டியெழுப்பும் அரசியலை, முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியை கொண்டுவருவதற்கு வழிவகை செய்கின்ற மிக உயர்ந்த சித்தாந்த, கலாச்சார, அறநெறி யொழுக்கத்தின் அடிப்படையிலான அரசியலைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் சக்தியாகும்.

இம்மண்ணின் உண்மையான புரட்சிகரக் கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி அத்தகைய அரசியலுக்கான வழிகாட்டியாக இருக்கிறது. இந்த இலக்குடன் நாங்கள் எங்களின் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

### முதலாளித்துவம் பகுத்தறிவை அழித்தொழித்து கண்மூடித்தனத்தை வளர்த்துக்கொண்டிருக்கிறது

வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் முதலாளித்துவம் அதன் தாக்குதலைத் தொடுத்துக் கொண்டிருக்கிறது. கல்வி பெறுவதற்கான வாய்ப்பு மேன்மேலும் தடைசெய்யப் பட்டுக் கொண்டிருக்கிறது. கல்விப் பாடத்திட்டம் மதச்சார்பு மற்றும் ஆன்மீகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் இந்திய மறுமலர்ச்சி யின் தந்தைகளான ராம் மோகன், வித்யாசாகர் ஆகியோர் நமது கல்வித்திட்டத்தில் வேதங்களும் வேதாந்தமும் வேண்டாம், சமஸ்கிருத மொழி வேண்டாம். ஆனால், அறிவியல், தர்க்கம் மற்றும் அறிவியல் தத்துவம்தான் நமக்கு வேண்டும் என ஆணித்தரமாகக் கூறினார்கள். உண்மையான மனிதனை உருவாக்கும் மதச்சார்பற்ற அறிவியல் பூர்வ கல்வியை அறிமுகப்படுத்த வேண்டும். அவர்களின் கண்ணோட்டத்தை மாற்றும் மதச்சார்பற்ற அறிவியல்பூர்வ ஜனநாயகக் கல்வியை வழங்கவேண்டும். ஆனால் கல்வியில் இந்த அறிவியல்பூர்வ அணுகுமுறையின் மீதான தாக்குதல் முதலில் காங்கிரஸிடமிருந்துதான் வந்தது. அறிவியல்பூர்வ சிந்தனையை மழுங்கடிப் பதில், பகுத்தறிவுக் கண்ணோட்டத்தை அழித்தொழிப்பதில், தர்க்கவாதத்தை அகற்றி அதன் மூலம் எவரும் ஆட்சேபனையும் கேள்வியும் எழுப்பாமல் இருப்பதில், எவ்வித வாதத்திலும் நுழையாமல் பார்த்துக்கொள்வதில், தலைவர்கள் கூறுவதை கண்மூடித்தனமாகக் கடைப்பிடிப்பதில் அடுத்ததாக வந்த பாஜக மேலும் ஒரு அடி முன்சென்றுவிட்டது. ஆதலால், கண்மூடித் தனமான பகுத்தறிவுக்குப் புறம்பான நம்பிக்கையை வளர்த்தெடுக்கும்பொருட்டு அவர்கள் மதச்சார்புக் கல்வியை அறிமுகப்படுத்தியிருக் கிறார்கள்; மத வெறியுணர்வையும் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

### பூர்ஷ்வா தேர்தல் இன்று ஒரு மிகப்பெரும் ஏமாற்று

தேர்தல் முடிவுகள் மக்களின் தீர்ப்பை பிரதிபலிக்கின்றதா? அது "மக்களால், மக்களுக்காக, மக்களின்" என்ற தீர்ப்பாக இருக்கிறதா? தேர்தல்களின்போது நூற்றுக் கணக்கான கோடி ரூபாய்கள் அள்ளி வீசப்படு கின்றன. இந்த எண்ணற்ற கோடி ரூபாய் பணத்தை யார் வழங்குகின்றனர். அதற்கான விடை முதலாளித்துவவாதிகளும் பெரும் வணிகர்களும் தான் என்பதாகும். பாஜகவும் காங்கிரசும் அவர்களின் சேவகர்களாகும். ஆட்சியில் அமர்ந்தவுடன், இத்தகைய கட்சிகள் ஆளும் முதலாளித்துவாதிகளின் சேவகர்கள் போல் வேலை செய்கிறார்கள், அவர்களின் உத்தரவு களை நிறைவேற்றுகிறார்கள். இப்போது இவ்விரண்டு கட்சிகளும் பெரும் தொகையை செலவழித்துக் கொண்டிருக்கின்றன. மொபைல் போன்கள், டிவிக்கள், லேப்டாப்புகள், சைக்கிள்கள் இன்னும் பல வடிவங்களில் இலவசங்களாக அவர்கள் வினியோகம் செய்கின்றனர். மக்கள் ஆகாயத்திலிருக்கும் சந்திரனை வேண்டுமென இப்போது கேட்டால், வாக்குகளைப் பெறுவதற்காக அவர்கள் அதையும் தரச் சம்மதம் தெரிவிப்பார்கள்.

ஒட்டாண்டியாக்கப்பட்ட மக்கள் சாதாரண நாட்களில் எதுவும் கிடைக்காததனால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வாக்குகளைக் கேட்டுவரும் கட்சிகள் தரும் சிறிதளவையாவது பெற்றுக்கொள்வோம் என எண்ணுகிறார்கள். அது சைக்கிளாக இருந்தாலும், குழாய்க் கிணறாக இருந்தாலும், ஒரு ஜோடி காலணியாக இருந்தாலும் வாங்கிக் கொள்கிறார்கள், இவை நன்கொடையென பார்க்கப்பட்டாலும், உண்மையில் அது லஞ்சமேயன்றி வேறெதுவும் அல்ல.

இத்தகைய அனைத்து இலவசங்களுக்கும் யார் நிதியுதவி செய்கின்றனர்? நிதி வழங்குபவர்கள் ஆளும் முதலாளித்துவவாதிகள்தான். பின்னர் வரியை அதிகரிப்பதன் மூலம், அத்தியாவசியப் பொருட்களின் விலையை உயர்த்துவதன் மூலம் மக்களிடமிருந்து செலவு செய்ததைவிடப் பல மடங்கு வசூல் செய்துவிடுவார்கள். இன்று தேர்தலானது மக்களுக்கு ஒரு கேலிக்கூத்தான தாக, ஒரு பெரும் ஏமாற்றாக இருக்கிறதேயன்றி வேறெதுவுமல்ல.

தேர்தல் கேலிக்கூத்தை அம்பலப்படுத்த, தேர்தல் மூலம் எந்த அடிப்படைப் பிரச்சினை யையும் தீர்க்க முடியாது என்ற உண்மையை மக்களிடம் உணர வைக்க நாங்கள் தேர்தலில் பங்கேற்கிறோம். புரட்சிக்காக மக்கள் தயாராகும் வரை, பிற கட்சிகளிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட எங்களின் தெளிவான அடிப்படை அரசியல் பாதையில் நாங்கள் தேர்தலில் போட்டியிட்டாக வேண்டும். மாபெரும் லெனினது போதனை இதுதான். எங்கள் வழியில், ஒரு புரட்சிகரக் கட்சியாக எங்களின் முழு பலத்துடன் மக்களை ஒன்றுதிரட்டி, வாழ்வின் எரியும் பிரச்சினைகளை முன்வைத்த வெகுஜனப் போராட்டங்களைக் கட்டியெழுப்புகிறோம். அவ்வாறு நடத்தப்படும் மக்கள் போராட்டங்களின் ஓர் அங்கமாக தேர்தலில்கூட நாங்கள் போட்டியிடுகிறோம்.

சிபிஐ(எம்), சிபிஐ கட்சிகள் வெறுமனே சந்தர்ப்பவாத தேர்தல் நலனை முன்னிட்டு தேசிய மற்றும் பிராந்திய பூர்ஷ்வா கட்சிகளுடனும் அத்துடன் ஜாதியக் கட்சிகளுடனும்கூட கைகோர்த்துக் கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய சந்தர்ப்ப வாதத்தை மேற்கொண்டு மக்களை நாங்கள் ஏமாற்றவில்லை. சித்தாந்த அடிப்படையிலும் உறுதியான கோட்பாடுகளின் அடிப்படையிலும் அமைந்த வர்க்க, வெகுஜனப் போராட்டங்களை வளர்த்தெடுப்பதற்கான இடதுசாரி ஜனநாயகக் கட்சிகளின் ஒற்றுமையை நாங்கள் விரும்புகிறோம்.

### அரசியலை மக்கள் புரிந்துகொண்டு நண்பனையும் எதிரியையும் வேறுபடுத்திப் பார்க்கத் தெரியவேண்டும்

தோழர்களே, நண்பர்களே, நான் ஓர் வேண்டுகோளை தாழ்மையுடன் முன்வைக்கிறேன். விடுதலைப் போராட்டத்தின் போது, ஏழை மற்றும் நடுத்தர வர்க்கக் குடும்பங்களிலிருந்து வந்த புதல்வர்களும் புதல்விகளும் தங்களின் உயிரைத் தியாகம் செய்தனர். ஆனால், அரசு அதிகாரமோ, இந்திய தேசிய முதலாளித்துவ வர்க்கத்தால் கைப்பற்றப்பட்டது. எப்படி இது நடக்க முடிந்தது? அரசியலை அன்று மக்கள் புரிந்துகொள்ள முயற்சிக்காமல் இருந்ததுதான் இதன் பிரதானக் காரணமாகும். அறிவற்றவர்களாக கண்மூடித் தனமாக மக்கள் இருப்பதையே அன்றைய (காந்தியின் தலைமையிலான) சமரசவாதத் தலைவர்களும் விரும்பினர். தங்களால் பல்வேறு சிக்கலான விஷயங்களை, அரசியல் திருப்பங்களை புரிந்துகொள்ள முடியாது; எனவே தலைவர்களே மேற்கொண்டு செயல்பாடுகளை முடிவு செய்யட்டும் என மக்களும் எண்ணினார்கள். இதனை சமரசவாதத் தலைவர்கள் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர். அந்நேரத்தில், நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பாதைக்கும் காந்திஜியின் பாதைக்கும் இடையேயான வேறுபாட்டை மக்கள் புரிந்துகொள்ள முடியவில்லை. சுபாஷ் சந்திர போஸ் ஏன் காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார் என்பதையும் இறுதியில் ஏன் வெளியேற்றப்பட்டார் என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

மக்கள் தொடர்ந்து இன்னும் அறியாமையில் இருந்தார்களேயானால், ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் பூர்ஷ்வா பிரச்சாரங்களாலும் தேர்தல் நேரத்தில் கட்சிகள் தரும் பணம் மற்றும் இலவசங்களைக் கண்டு யாருக்கு வாக்களிப்பது என்பதை முடிவு செய்தார்களேயானால். பின்னர் அவர்கள் மீண்டும் ஏமாற்றப்படுவார்கள்.

அரசியல் ஒரு சாக்கடை, அதில் ஈடுபட வேண்டாம் என்று சிலர் சொல்லுவர். "யாரெல்லாம் இலங்கைக்குச் செல்கிறார்களோ அவர்களெல்லாம் ராவணனாக ஆகிவிடு கிறார்கள்" என்ற கூற்று ஒன்று உள்ளது. இது சரியான கூற்றல்ல. ராமாயணத்தின்படி, ராமன், இலக்குவணன், சீதை, அனுமான் ஆகிய அனைவருமே இலங்கைக்குச் சென்றனர். ஆனால் அவர்கள் ராவணனாக மாறவில்லை. உண்மையில், ராமாயணத்தின் போதனை யாதெனில் முனிவர் மாறுவேடத்தில் ராவணன் இருந்ததை சீதையால் கண்டிபிடிக்க முடிந்திருந்தால் அவள் எதிர்கொண்ட பேரிடரை வரவிடாமல் தவிர்த்திருக்கலாம். இலக்குவணனின் எச்சரிக்கையை சீதை அலட்சியப்படுத்தி அவன் கிழித்த கோட்டைத் தாண்டினாள். அதனால்தான் சீதை துயரத்துக்கு ஆளானாள். இங்கு 'கிழித்த கோட்டை தாண்டாதே' என்பதல்ல பொருள்; விழிப்புணர்வின்றி இருந்ததால் ஏற்பட்ட விளைவைக் காட்டவே இவ் உதாரணமாகும்.

இன்று வாக்கு வியாபாரிகள் ஆகாய விமானத்திலும், ஹெலிகாப்டரிலும் கிராமங் களுக்கும் நகரங்களுக்கும் வந்து, கைகளைக் குவித்து வாக்குகளுக்காகக் கையேந்தி நின்றுகொண்டு அவர்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கு மாறு வாக்காளர்களை கேட்டுக்கொள்கின்றனர். மக்களுக்குச் சேவை செய்ய உறுதி பூண்டி ருப்பதாக அவர்கள் பாசாங்கு செய்கின்றனர். அவர்களுக்குப் பணபல பின்புலம் இருக்கிறது. அவர்கள் அதிகாரத்திற்கு வந்தவுடன் தங்களின் உண்மை முகத்தைக் காண்பிப்பார்கள். அவர்களின் பொய்யான வாக்குறுதிகளையும் ஏமாற்றுப் பேச்சுக்களையும் நம்பி ஏமாறாதீர்கள்.

சாமானிய மக்கள் அரசியலைப் புரிந்து கொண்டாக வேண்டும். நண்பன் யார், எதிரி யார் என்பதை அவர்கள் வேறுபடுத்திப் புரிந்து கொள்ள முடிய வேண்டும். எக்கட்சி ஒடுக்கப்படும் மக்களுக்காகச் சேவை செய்கிறது என்பதையும், பாடுபடும் வெகுஜனங்களின் நலனை யார் உயர்த்திப்பிடிக்கின்றனர் என்பதையும் அடையாளம் காண்பதற்குத் தேவையான விழிப்புணர்வையும் கண்ணோட்டத்தையும் அவர்கள் கைவரப்பெற வேண்டும். பட்டினியால், பெருகிவரும் வேலை யின்மையால், வேலையிழப்பால் பீடிக்கப்பட்டு மக்கள் மாண்டுகொண்டிருக்கின்றனர். குடும்பங்கள் பிரிந்து செல்கின்றன. வயதான பெற்றோரைப் பராமரிக்கும் பொறுப்பை மறுக்கும் அவர்களின் குழந்தைகளால் அவர்கள் வீட்டை விட்டு விரட்டியடிக்கப்படுகின்றனர். வரதட்சணைக்காக மனைவி கொல்லப்படுகிறாள். ஆயிரக்கணக்கான பெண்கள் வல்லுறவு செய்யப்படுகின்றனர்.

தொடர்ச்சி 5ம் பக்கம்

# சென்னை பல்கலைக்கழகத்தின் வங்கிக் கணக்குகளை முடக்கியதைக் கண்டித்து – கல்வி பாதுகாப்பு கமிட்டி

*சென்னை பல்கலைக்கழகத்தின் வங்கிக் கணக்குகளை முடக்கியதைக் கண்டித்து அகில இந்திய கல்வி பாதுகாப்பு கமிட்டி (AISEC) வெளியிட்ட அறிக்கை:*

சென்னை பல்கலைக்கழகத்தின் வங்கிக் கணக்குகள் அனைத்தும் வருமானவரித் துறையால் முடக்கப்பட்டிருக்கின்றன. இச்செய்தி தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியாவின் பழமையான பல்கலைக்கழகங்களில் ஒன்றான, சென்னை பல்கலைக்கழகம் தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்ப்பதாகும். இது 1851ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது. நோபல் பரிசு வென்ற சி வி இராமன், சு சந்திரசேகர், மாபெரும் கணித மேதையான ராமானுஜம், பெரும் மேதைகள் பலர், பேராளுமைகள் பலர் இப்பல்கலைக்கழகத்தின் பல்வேறு கல்லூரிகளில் பயின்றவர்கள். இப்பல்கலைக்கழகம் ஒரு அரசுப் பல்கலைக் கழகம். வரலாற்றுப்பின்னணியில் கூறுவதாயின் இது மக்களின் பல்கலைக்கழகம். 'நீண்ட பாரம்பரியம் கொண்ட இப்பல்கலைக்கழகம் இன்று இப்படி ஒரு நிலைக்கு ஏன் வந்தது?' என்பதே மக்களின் கேள்வியாகும்.

2019ஆம் ஆண்டு தணிக்கைத் துறை மூலம் தணிக்கைத் தடை எழுப்பப்பட்டதாக ஊடகங்களில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் அதன் காரணமாக ஒன்றிய அரசின் பல்கலைக்கழக மானியக்குழுவும் தமிழக அரசும் படிப்படியாக நிதிப்பங்களிப்பினைக் குறைத்திருக்கின்றன. ஒருகட்டத்தில் அரசின் பங்களிப்பு 51 விழுக்காட்டிற்கும் கீழ் குறைந்திருக்கிறது. இதனால் இப்பல்கலைக்கழகத்தினை பொதுப் பல்கலைக் கழகம் என்ற நிலையில் இருந்து கீழிறக்கி சுயநிதிப் பல்கலைக்கழகம் என்ற இடத்திற்குச் சட்டத்தின் பார்வையில் தள்ளியிருக்கிறது. இந்தச் சட்டச் சிக்கலால் சுயநிதிப்பல்கலைக்கழகம் போன்று வருமான வரி கட்ட வேண்டிய நிலைக்கு இப்பல் கலைக்கழகம் தள்ளப்பட்டிருக்கிறது. சிக்கல்கள் மென்மேலும் அதிகமாகி இன்று சென்னை பல்கலைக்கழகத்தின் வங்கிக் கணக்குகள் அனைத்தும் வருமான வரித்துறையால் முடக்கப்பட்டிருக்கின்றன.

1986ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அப்போதைய 'தேசியக் கல்விக்கொள்கை 1986 பெரும் ஆபத்துக்கள் நிறைந்தது என நீதியரசர் வி ஆர் கிருஷ்ணய்யர் போன்ற பேராளுமைகள் எச்சரித்தது கல்வியாளர்கள் அனைவரும் அறிந்ததே. கல்வியை வணிகமயமாக்கும் மடைக்கதவுகள் அன்றுதான் திறக்கப்பட்டன. பொதுக்கல்வியை அளிக்கும் பொறுப்பில் இருந்து அரசு தன்னைப் படிப்படியாக விடுவித்துக் கொள்ளும் போக்கு தொடங்கியது. அரசுப் பள்ளிகளையும் அரசுக் கல்லூரிகளையும் அரசுப் பல்கலைக்கழகங்களையும் அரசு சுமையாகக் கருதத் தொடங்கியது. பொதுக்கல்வி நிறுவனங்கள் நாசமாவதை ஒன்றும் தெரியாதது போல அரசு வேடிக்கை பார்த்து வருகிறது. இதன் ஒரு பகுதியாகவே, புகழ்பெற்ற சென்னை பல்கலைக் கழகம் இன்று இத்தகைய மிக மோசமான வீழ்ச்சியை எதிர்கொண்டிருக்கிறது.

2019ஆம் ஆண்டு எழுப்பப்பட்ட தணிக்கைத் தடையின் காரணத்தைக் கண்டறிந்து அதை நீக்குவதற்குத் தமிழக அரசிற்கு எவ்வளவு மணிநேரம் ஆகியிருக்கும்? அல்லது ஒன்றிய அரசிற்கு எவ்வளவு மணிநேரம் ஆகியிருக்கும்? அவர்களிடம் ஆட்சிப்பணியில் அதிகாரிகள் பலர் இருக்கின்றனர். கல்வித்துறை செயலர்கள் இருக்கின்றனர். அமைச்சர்கள் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் தாங்கள், மக்கள் பணியாளர்கள் என்ற நினைவுடன் தான் இருக்கிறார்களா?

இந்நிலைக்குச் சென்னை பல்கலைக்கழகத்தை வீழ்ச்சியடையச் செய்த ஒன்றிய, மாநில அரசுகளை அகில இந்தியப் பாதுகாப்புக் கமிட்டி, தமிழ்நாடு வன்மையாகக் கண்டிக்கிறது. ஆய்வு மாணவர்கள், விடுதி மாணவர்கள் நிதியில்லாமல் இக்கட்டான நிலையில் இருக்கிறார்கள். இதனைக் கருத்தில் கொண்டு, போர்க்கால அடிப்படையில் முடக்கப்பட்ட வங்கிக் கணக்குகளை விடுவிக்க வேண்டும் என்று அகில இந்திய கல்வி பாதுகாப்பு கமிட்டியின் தமிழ்நாடு மாநிலக் கமிட்டி (AISEC) கோருகிறது. மேலும் தணிக்கைத் தடைக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிந்து குற்றவாளிகள் யாராயினும் அவர்களைத் தகுந்த துறைவழியாக அல்லது நீதிமன்றம் வழியாக நடவடிக்கைக்கு உட்படுத்துமாறு கோருகிறது. மேலும் இதன் கீழ் பல லட்சம் மாணவர்கள் படிக்கிறார்கள் என்பதை நினைவில் கொண்டு இது போன்ற சூழல் மீண்டும் உருவாகாதவாறு விழிப்புடன் இருக்குமாறு மத்திய, மாநில அரசுகளைக் கோருகிறது.

மக்கள் விரோத தேசிய கல்வி கொள்கை 2020 வின் விளைவாகச் சென்னை பல்கலைக் கழகத்தைத் தனியார் பல்கலைக்கழகமாகக் கருதி அதன் வங்கிக் கணக்குகளை முடக்கியதை ஒன்றிய அரசாங்கம் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். மேலும் தணிக்கையினால் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்த்து, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள "தொகுப்பு நிதி" (Block Grant) யினை உடனடியாகத் தமிழ்நாடு அரசு வழங்கக் கோரியும் சக்திவாய்ந்த போராட்டத்தை நடத்த மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வி மீது அக்கறை கொண்டோர் என அனைவரையும் ஏஐஎஸ்இசி (AISEC) அறைகூவி அழைக்கிறது ■

## மக்கள் நலனுக்கான தேர்தல் அணுகுமுறை . . .

# அரசியலை மக்கள் புரிந்துகொண்டு நண்பனையும் எதிரியையும் வேறுபடுத்திப் பார்க்கத் தெரியவேண்டும்

*4ம் பக்கத் தொடர்ச்சி*

பெண்கள் கடத்தப்படுவது அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இவையனைத்தும் தொடர்ந்து தடையின்றி நடந்துகொண்டிருக்குமா? அல்லது இவ்வனைத்து துயரங்கள், சீர்கேடுகள், பிறழ்ச்சிகள், குற்றங்கள், மோசடிகளுக்கான தீர்வு ஏதும் உள்ளதா?

முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியை நிறைவேற்றுவதில் மட்டுமே அவற்றிற்கான தீர்வு உள்ளது. எங்களது கட்சி மார்க்சிசம், லெனினிசம், சிப்தாஸ் கோஷ் சிந்தனையின் அடிப்படையில் அத்தகைய புரட்சிப் பதாகையை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறது. அரசியலைப் புரிந்துகொள்ள வேண்டும், சரியான புரட்சிகரத் தலைமையின் கீழ் அமைப்பு ரீதியில் உங்களை ஒன்றுதிரட்டிக் கொள்ளுங்கள் என மீண்டும் ஒருமுறை உங்களை வேண்டிக் கொள்கிறேன். ஊடக பிரச்சாரங்களினால் தடுமாறிப் போக வேண்டாம். நாங்கள் நடத்திக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டத்திற்கு ஊடகங்களில் அதிக விளம்பரம் கிடைக்காது என்பதை நீங்கள் பார்ப்பீர்கள். லட்சக்கணக் கானோரைக் கொண்ட கூட்டத்தை நாங்கள் நடத்துகிறோம். ஆனால், ஏகபோகங்களின் கட்டுப் பாட்டிலிருக்கும் ஊடகங்கள் எங்களது அத்தகைய கூட்டங்களைப் பற்றிய செய்திகளைக்கூட வெளியிடுவதில்லை. ஏனெனில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) தான் ஆளும் வர்க்கத்தின் எதிரி என்பது அவற்றிற்குத் தெரியும்.

### எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை ஆதரித்து வலிமையாக்குவீர்!

எந்த ஊடக ஆதரவும் இல்லாமல், எங்கள் கட்சி வளர்ந்து கொண்டிருக்கிறது. போராடிக் கொண்டிருக்கும் தோழர்கள் 25 மாநிலங்களி லிருந்து வந்து இங்கு கூடியிருக்கின்றனர். ... தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையால் தூண்டப்பட்ட மிக உயர்ந்த புரட்சிகர சித்தாந்தத்தின் அடிப்படையில், நகர மற்றும் கிராமப் பகுதிகள் இரண்டிலும் மக்களிடம் எழுச்சியூட்டி அவர்களைக் கிளர்ந்தெழச் செய்துகொண்டிருக்கின்றனர். இக்கட்சியை மேலும் ஆதரித்து வலிமையாக்குங்கள்! அதன் மூலம் வரும் நாட்களில் நாங்கள் மேலும் சக்திவாய்ந்த போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சிக் கொடியை உயர்த்திப் பிடிக்க, குதிராம், சூர்ய சென், சந்திரசேகர் ஆஸாத், பகத்சிங், அஷ்ஃபகுல்லாகான், பிரிதிலதா, இன்னும் பிற ஆயிரக்கணக்கான சுடர்மிகு தியாகிகளைப் போன்ற நபர்கள் இன்று நமக்குத் தேவை. இத்தகைய நோக்கத்துடன், இச்சகாப்தத்தின் உன்னதத் தத்துவமாகிய மார்க்சிசம், லெனினிசம், சிப்தாஸ் கோஷ் சிந்தனையினடிப்படையில், ஒடுக்கப்படும் மக்களை, குறிப்பாக மாணவர் களையும் இளைஞர்களையும் கிளர்ந்தெழச் செய்யவும் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், நடுத்தர வர்க்கத்தினரின் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து வர்க்க மற்றும் வெகுஜனப் போராட்டங்களை கட்டியெழுப்பவும் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். முடிந்தவரை பிற இடதுசாரிக் கட்சிகளையும் ஊழியர்களையும் இத்தகைய போராட்டங்களில் ஈடுபடுத்த நாங்கள் முயற்சித்துக்கொண்டிருக்கிறோம்.

எங்களோடு அணிதிரண்டு வாருங்கள், எங்கள் கட்சியை பலப்படுத்துங்கள். அதன் மூலம் வருங்காலங்களில் இன்னும் சக்திவாய்ந்த இயக்கங்களை எங்களால் கட்டியெழுப்ப முடியும், அதிக சக்திவாய்ந்தப் போராட்டங்களை நடத்த முடியும். இந்த ஓய்வொழிவற்ற இயக்கங்களை நடத்தும் போக்கில், தேர்தலில் நாங்கள் பங்கேற்கிறோம். தேர்தலுக்குப் பின்னரும் போராட்டத்தை நாங்கள் தொடர்வோம். இத்துடன் இன்று எனது உரையை நிறைவு செய்கிறேன் ■

**புதுச்சேரி**

# மாபெரும் தலைவர் லெனின் அவர்களின் நினைவு தினம்



**எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் தோழர் சந்திதாஸ் பட்டாச்சார்யா உரை**

# பிப்ரவரி 16 தொழிலாளர்கள் விவசாயிகள் அகில இந்திய வேலை நிறுத்தம்



வத்தலகுண்டு, திண்டுக்கல்




சென்னை



நெய்வேலி



சேலம்



மதுரை



தேனி



அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்

கடந்த 10 ஆண்டுகளாக மத்தியில் ஆட்சியில் இருக்கும் பாஜக அரசாங்கம் மக்கள் விரோத நடவடிக்கைகளையும் தொழிலாளர்கள் விவசாயிகள் மீதான மசோதாக்கள் மற்றும் தாக்குதல்களையும் தொடுத்து வருகின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகளின் விளை பொருட்களை கார்ப்பொரேட் முதலாளிகள் அபகரிக்கும் வகையில் மூன்று வேளாண் சட்டங்களை மத்திய அரசாங்கம் கொண்டு வந்தது. இதனை எதிர்த்து விவசாயிகள் டெல்லியில் 13 மாதங்களாக போராடினர். இதில் 700க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் இத்தீரமிக்க போராட்டத்தால் மத்திய அரசாங்கம் பணிந்து மூன்று வேளாண் சட்டங்கள் திரும்ப பெற்றுக் கொண்டனர். மேலும் விவசாய விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை (எம்எஸ்பி) வழங்குதல் மற்றும் மின்சார மசோதா திருத்தச் சட்டம் வாபஸ் பெறுதல் போன்றவை எதிர்காலத்தில் நிறைவேற்றித் தருவோம் என மத்திய அரசாங்கம் உறுதி அளித்தது ஆனால் இவை கிடப்பில் போடப்பட்டன. நாடு முழுவதும் விவசாயிகள் கடன் தொல்லையாலும தாங்கள் விளைவித்த விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை கிடைக்காமலும் ஆயிரக்கணக்கில் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு வருகின்றனர்

அதேபோன்று தொழிலாளர்களும் இளைஞர் களும் வேலைவாய்ப்பு, விலைவாசி உயர்வு, பழைய பென்ஷன் திட்டத்தை மீண்டும் அமல்படுத்துதல் 12 ஆயிரம் குறைந்தபட்ச பென்ஷன் மற்றும் ரூபாய் 26 ஆயிரம் குறைந்தபட்ச ஊதியம் போன்ற வற்றிற்காகவும் போராடி வருகின்றனர். மேலும் ஏற்கெனவே தொலை தொடர்பு , தபால் துறை, போக்குவரத்து விமானம் துறைமுகம், கல்வி, சுகாதாரம் போன்றவை தனியார்மயம் ஆக்கப்பட்ட நிலையில் இளைஞர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் வகையில் கால வரைமுறை வேலை திட்டம் (ஃபிக்ஸடு டைம் எம்ப்ளாய்மெண்ட்) என்ற பெயரில் பணிக்கு சேரும்போதே ஓய்வு தேதியை அறிவிக்கும் சட்டம் நிலையான திருத்தி மத்திய அரசாங்கம் கொண்டு வந்துள்ளது முறைசாரா தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நிதியை குறைத்தல் நல வாரிய திட்டங்களை முடக்குதல் போன்ற தொழிலாளர் விரோத முடிவை மத்திய அரசாங்கம் எடுத்துள்ளது. மேலும், இந்திய குற்றவியல் சட்டம் (சிஆர்பிசி) புதிய தண்டனை சட்டம் (சிபிசி) இந்திய சாட்சிய சட்டம் போன்ற வற்றை மக்களுக்கு விரோதமாக திருத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு நாட்டில் ஒரு அடக்குமுறை ஃபாசிச ஆட்சியை மத்திய அரசாங்கம் கட்டவிழ்த்து உள்ளது.

இச்சூழ்நிலையில் அகில இந்திய விவசாயிகள் சங்க கூட்டமைப்பும் (எஸ்கேஎம்) அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து விவசாயிகள் மற்றும் தொழிலாளர் மீதான மத்திய அரசாங்கத்தின் தாக்குதல்களை கண்டித்து நாடு முழுவதும் போராட்ட இயக்கங்களை நடத்த முடிவு செய்து டெல்லியில் கல்கோத்ரா அரங்கத்தில் வரலாற்று சிறப்புமிக்க மாநாடு ஒன்றை நடத்தினர். இந்த மாநாட்டில் நமது விவசாய அமைப்பான விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர் சங்கம் (ஏஐகேகேஎம்எஸ்) மற்றும் தொழிலாளர் அமைப்பான ஏஐயுடியுசி இம் கலந்து கொண்டன. இம் மாநாடு பல்வேறு போராட்டங்களை விவசாயிகளும் தொழிலாளர் களும் ஒன்றிணைந்து நடத்த முடிவு செய்தது.

அதன்படி சென்ற ஜனவரி 26ஆம் தேதி தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் டிராக்டர் பேரணி நடத்தினர். நமது அமைப்பில் இருந்து சென்னை சேலம் தேனி மாவட்டத்திலிருந்து திரளாக நூற்றுக்கணக்கில் விவசாயிகளும் தொழிலாளர்களும் வாகனத்தில் நேரடியாக சென்று மத்திய அரசாங்கத்தின் விவசாய மற்றும் தொழிலாளர் சட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை எதிர்த்து முழக்கமிட்டது மக்களை வெகுவாகக் கவர்ந்தது.

### பிப்ரவரி 16 அகில இந்திய வேலை நிறுத்தம் மற்றும் கிராம பந்த்

அனைத்திந்திய விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் சங்கங்களின் அறைகூவலின்படி பிப்ரவரி 16 அன்று தமிழ்நாட்டில் உள்ள எஸ்கேஎம் தலைவர்களும் மத்திய தொழிற்சங்கங் களின் தலைவர்களும் ஒன்று கூடி வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்தினர். தமிழகத்தில் உள்ள தொழிலாளர்கள் எல்லா மாவட்டங்களிலும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் அதே நேரத்தில் கிராமங்களில் விவசாயிகள் கிராம பந்த் நடத்தினர். போராட்டத்தில் சென்னை, விழுப்புரம், சேலம், தேனி, மதுரை, அறந்தாங்கி புதுக்கோட்டை மாவட்டங்களில் எமது தொழிற்சங்கமான ஏஐயுடியுசி மற்றும் விவசாய ஏஐகேகேஎம்எஸ் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் திரளான அளவில் கைதாயினர். சென்னையில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் திரளான அளவில் பெண்கள் கலந்து கொண்டது சிறப்பாக அமைந்திருந்தது. போராட்டத்தில் முன்வைக்கப் பட்ட 19அம்ச கோரிக்கைகள் வரும் பாராளு மன்றத் தேர்தலில் எந்த கட்சி அல்லது எந்த கூட்டணி நிறைவேற்ற உறுதி மொழி கொடுக்கின்றதோ அதையே மக்கள் ஆதரிக்க வேண்டும். இல்லையேல் இறுதி வரையில் போராட்டம் தொடரும் என போராட்டக்காரர்கள் அறைகூவல் விடுத்தனர் ■





**DECLARATION**

Statement about ownership and other particulars about the newspaper PAATTALI CHINTANAI to be published in the first issue after last of February

**FORM IV (SEE RULE 8)**

| | |
|---|---|
| Place of Publication: | New No16, Old No18, Rotler Street, Choolai Chennai 7 |
| Periodicity of its Publication : | Monthly |
| Printer's Name : | A Rengasamy |
| Nationality : | Indian |
| Address : | New No16, Old No18, Rotler Street, Choolai Chennai 7 |
| Publisher's Name : | A Rengasamy |
| Nationality : | Indian |
| Address : | New No16, Old No18, Rotler Street, Choolai Chennai 7 |
| Editor's Name : | A Rengasamy |
| Nationality : | Indian |
| Address : | New No16, Old No18, Rotler Street, Choolai Chennai 7 |

Name and address of Individuals who own the newspaper and partners of shareholders holding more than one percent of the total capital.

**SOCIALIST UNITY CENTRE OF INDIA (COMMUNIST)**

**TAMILNADU STATE ORGANISING COMMITTEE**

I, A Rengasamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

March 1, 2024

**A Rengasamy**

Signature of Publisher

# தோழர் புகழேந்தி அவர்களுக்கு செவ்வணக்கம்

## தோழர் ந புகழேந்தி அவர்களின் மறைவுக்கு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி மாநில கமிட்டியின் அஞ்சலி செய்தி

தோழர்களே, நண்பர்களே, உற்றார் உறவினர்களே,

நமது அன்பிற்கும் தோழமைக்கும் உரிய நேசமிக்க தோழர் புகழேந்தி அவர்கள் பத்து நாட்களுக்கு முன்பு கடந்த பிப்ரவரி 12, 2024 அன்று நம்மைவிட்டு மறைந்துவிட்டார். அன்னாருக்கு நமது புரட்சிகர மரியாதையையும் செவ்வணக்கத்தையும் செலுத்த, நாம் ஆழ்ந்த துயரத்துடனும் வேதனையுடனும் இந்த இரங்கல் கூட்டத்தில் கூடியுள்ளோம்.

சந்திரபோஸ் என நம்மால் அழைக்கப்படும் தோழர் புகழேந்தி எமது அன்பிற்குரிய கட்சியான சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) கட்சியின் மூத்த உறுப்பினரும் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினரு மாவார். அவர் புதுக்கோட்டை மாவட்ட கட்சி அமைப்பிற்கு பொறுப்பாளராக செயலாற்றினார். அவர், அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் அகில இந்திய செயற்குழு உறுப்பினராகவும் அச் சங்கத்தின் மாநில அமைப்புக் கமிட்டியின் தலைவராகவும் பணியாற்றினார்.

1980களில் அவர் சென்னையில் இருந்தபோது நமது கட்சியின் சில செயல்வீரர்களைச் சந்தித்தார். அவர்கள் மூலம், மாபெரும் மார்க்சிய சிந்தனையாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் சிந்தனையை அறிந்து கட்சியின் உன்னத கலாச்சாரத்தால் ஈர்க்கப்பட்டார். பின்னர், விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசியில் கட்சி அமைப்பில் 1984இல் தன்னை இணைத்துக் கொண்டார். அங்குதான் அவர் வேலையிலும் (Job) பணி நியமனம் பெற்றிருந்தார். பிறகு 1996 முதல் 2004 வரை விருதுநகர் மாவட்ட செயலாளராக பொறுப்பேற்றார். அதன் பிறகு புதுக்கோட்டை மாவட்டத்தில் கட்சிப் பொறுப்பாளராக செயலாற்றினார்.

தோழர் புகழேந்தி பல ஆண்டுகளாக கட்சிப் பத்திரிகையான பாட்டாளி சிந்தனை ஆசிரியர் குழு உறுப்பினராக செவ்வனே பணியாற்றி வந்தார். ஆங்கிலத்தில் இருக்கும் கட்சிப் புத்தகங்களையும் புரோலிடேரியன் எரா கட்டுரைகளையும் தமிழில் மொழிபெயர்ப்பதில் தனிச் சிறப்புமிக்க மொழி ஆளுமையை வெளிப்படுத்தினார். தனக்கு கொடுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதில் அவர் புலப்படுத்திய தாமதமின்மை மற்றும் திறன், குழுவின் பிற உறுப்பினர்களுக்கும் எழுச்சியூட்டு வதாக இருந்தது.

மிகக் குறிப்பாக, எப்பொழுதெல்லாம் அமைப்புரீதியாக கட்சி நெருக்கடியைச் சந்தித்ததோ அத்தருணங்களில் அமைப்பின்பால் நின்று கட்சியையும் புரட்சியையும் பாதுகாத்தார்.

கடந்த பல ஆண்டுகளாக மாநிலத்தில் கட்சியின் விவசாய சங்கத்தை கட்டும் பணியில் ஈடுபட்டார். எஸ்கேஎம் விவசாயக் கூட்டமைப்பின் அறைகூவலை பல பகுதிகளுக்கும் எடுத்துச் சென்று டெல்லியில் 2020 நவம்பரில் துவங்கிய தீரமிக்க விவசாயப் போராட்டத்திற்கு வலு சேர்த்தார். அவரும் ஏஐகேகேஎம்எஸ் விவசாயி களும் மாநிலத்தில் மட்டுமின்றி டெல்லிக்குச் சென்று போராட்டத்தில் கலந்து கொண்டனர். சென்ற நவம்பர் 26–27 விவசாய மற்றும் தொழிற்சங்கங்களின் பெருந்திரள் அமர்விலும் சென்னையில் கலந்துகொண்டு உரையாற்றினார். இவர் ஆற்றிய பணிகளால் புதுக்கோட்டையில் கட்சியும் மாநிலத்தில் விவசாய சங்கமும் பாட்டாளி சிந்தனை மாத இதழும் மேலும் முன்னேறிச் செல்லவிருந்த முக்கியமான கட்டத்தில் அவரை நாம் இழந்துவிட்டோம்.

சில ஆண்டுகளாக தோழர் புகழேந்தி சர்க்கரை நோயால் பீடிக்கப்பட்டு மருந்து உட்கொண்டு வந்தார். ஆனால் இவ்வருடம் ஜனவரி துவக்கத்தில் அவருக்கு காசநோய் (டி பி) இருப்பது கண்டறியப்பட்டு அதற்கான மருத்துவத்தை துவக்கியபோதுதான் சில வாரங்களில் அவருக்கு கடுமையான கல்லீரல் பாதிப்பு ஏற்பட்டது. தஞ்சையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. பின் சென்னையில் தீவிர சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்டார். இவ்விரு இடங்களிலும் சிறப்பு மருத்துவமனைகளில் சுமார் 20 நாட்கள் போராடி, இறுதியில் முக்கிய உறுப்புக்கள் செயலிழந்து தோழர் மரணமடைந்தார்.

மருத்துவமனையில் இருந்த பொழுதும்கூட கட்சியின் பணிகள், விவசாய சங்கத்தின் எதிர்வரும் கூட்டங்கள் அவர் மனதை ஆக்கிரமித்திருந்தன. பேச இயலா சூழலிலும்கூட தனது உறவினர்களையும் தோழர்களையும் அவர் அறிந்து கொள்ளும் அளவிற்கு விழிப்புணர்வு கொண்டிருந்தார். தோழர்களிடம் விவசாய சங்க பணி இருப்பதையும், தனது மனைவியிடம் டெல்லி கூட்டத்திற்கு செல்லும் பயணம் குறித்தும் நினைவுபடுத்திக் கொண்டிருந்தார்.

நல்ல கல்வி ஞானம் பெற்றிருந்த அவர், குறைவாகப் பேசி தனது கருத்துகளை தெளிவாக



வைக்கும் தன்னடக்கத்தை எப்பொழுதும் கொண்டிருந்தார். தன்மீது வரும் விமரிசனங் களையும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வார். கட்சியின் கலாச்சாரத்தையும் நன்னடத்தையும் கைவரப் பெற்றிருந்த அவர் தன்னுடன் தொடர்பில் வந்த அனைவரிடமும் நட்புடன் பழகுவார். புதுக்கோட்டை மற்றும் விவசாய ஐக்கிய முன்னணி, பிற இடதுசாரி அமைப்புகளின் முக்கிய நபர்களின் நட்பையும் அவர் பெற்றிருந்தார்.

ஆம், நாம் அவரை வெகுவாகவே இழந்திருக் கிறோம். அவரது இழப்பு நமக்கும் அவரது உற்றார் உறவினர் நண்பர்கள் ஆகியோருக்கும் மட்டுமல்ல, நமது அன்பிற்குரிய கட்சியின் தமிழ்நாடு மாநிலத்திற்கும், விவசாய சங்கத்திற்கும் புரட்சிக்கும் மிகப்பெரிய இழப்பாகும். பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும் நமது ஆசானும் வழிகாட்டியுமான தோழர் சிப்தாஸ் கோஷ் கற்பித்ததுபோல, அவரது இழப்பால் ஏற்பட்ட வேதனை வலியை புரட்சிகர விருப்புறுதியாக நாம் மாற்றிக்கொண்டு புரட்சிக்கான நமது போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவோமாக ■

**தோழர் புகழேந்தி அவர்களுக்கு செவ்வணக்கம்!**

**புரட்சி ஓங்குக!**

## எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் தோழர் ராதாகிருஷ்ணா மற்றும் மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் ஸ்ரீதர் ஆகியோரின் இரங்கல் செய்திகள்

### தோழர் ராதாகிருஷ்ணா

அன்பிற்குரிய தோழர்களே,

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநிலக் கமிட்டி உறுப்பினரும் புதுக்கோட்டை மாவட்ட பொறுப்பாளருமான தோழர் புகழேந்தி பிப்ரவரி 12, 2024 அன்று அகால மரணம் அடைந்ததையொட்டி மிகுந்த வேதனையுடனும் வருத்தத்துடனும் இந்த பிரியாவிடை அஞ்சலி செய்தியை நான் எழுதுகிறேன்.

பல ஆண்டுகளாக தோழர் புகழேந்தியை நான் அறிந்த போதிலும், தமிழ்நாடு கட்சிக்கு பொறுப்பாளராக இருந்த மத்தியக் கமிட்டி உறுப்பினர் சி கே லூகோஸ் அவர்களுக்கு, 2016 முதல் நான் துணையாக வந்தபோது மேலும் அதிகமாக அவருடன் பழக்கமானேன். தோழர் புகழேந்தியின் பெயர் செவிகளில் விழும் போதெல்லாம் அவரது கனிவான, மென்மையான, அறிவு முதிர்ந்த, அடக்கமான முகம் கண்முன் தோன்றும். மிகவும் மென்மையாகப் பேசும் பழக்கமுள்ள அவர், தன்னைவிட வயதில் பெரியவர் அல்லது சிறியவர் என எவரையும் புண்படுத்துமாறு பேசி நான் கண்டதில்லை.

புதுக்கோட்டையிலும் மாநிலத்திலும் கட்சியையும் அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தையும் வளர்த்தெடுக்க அவர் தனது முழு முயற்சியுடன் ஈடுபட்டார். அவரது அகால மரணத்தால், தமிழ்நாடு கட்சி அமைப்பிற்கு மட்டுமல்ல, சுரண்டப்படும் உழைக்கும் மக்களின், விவசாயிகளின் புரட்சிகர இயக்கங்களுக்கும் மிகப் பெரிய இழப்பாகும்.

மறைந்த தோழருக்கு நாம் அஞ்சலி செலுத்துவதன் ஒரே பொருள், நமது அன்பிற்குரிய தலைவரும் ஆசானும் வழிகாட்டியுமான தோழர் சிப்தாஸ் கோஷ் கற்பித்ததுபோல, தனது வாழ்நாள்வரை தோழர் புகழேந்தி நிறைவேற்ற வேண்டும் என கருதிய கடமைகளை நாம் நிறைவேற்ற உறுதி பூணுவதாகும்.

### தோழர் ஸ்ரீதர்:

தோழர் புகழேந்தி அவர்களின் அஞ்சலிக் கூட்டத்திற்கு நேரடியாக என்னால் வரயியலா விட்டாலும், அன்பிற்குரிய அத் தோழருக்கு அஞ்சலி செலுத்த கூடியுள்ள அனைத்து தோழர்களின், உறவினர்களின், நண்பர்களின் உள்ளங்களுடன் நானும் மனதளவில் இணைந்திருக்கிறேன்.

2017லிருந்து அவருடன் ஏற்பட்ட பழக்கத்தில், கட்சியின் மாநில அமைப்புக் கமிட்டியின் உறுப்பினர் என்ற வகையில் அமைப்பை வலுப்படுத்தவும், அகில இந்திய விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் சங்கத்தை மாநிலமுழுதும் பரப்பவும் அர்ப்பணிப்புடன் அவர் பணியாற்றுவதை நான் கண்டேன். தலைவர்கள், சக தோழர்கள் மற்றும் இளம் தோழர்களுடன் மரியாதை கொண்டு மிகவும் சகஜ உறவை அவர் பராமரித்தார். மென்மையான இயல்பைக் கொண்ட அவர், தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையிலிருந்து வகுக்கப்பட்ட கட்சி சாராம்சத்துடன் ஒவ்வொரு பிரச்சினையையும் கிரகித்துக்கொண்டார். கட்சி அமைப்பிலும் குறிப்பாக விவசாயிகள் அமைப்பிலும் அவற்றை வளர்த்தெடுப்பதில் முக்கியப் பங்காற்றினார். ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை பெற்ற அவர் கட்சி இலக்கியங்களை மொழிபெயர்ப்பதில் மிகுந்த பங்களிப்பை வழங்கியுள்ளார். கட்சி மாதயிதழான பாட்டாளி சிந்தனையின் மூத்த ஆசிரியர்குழு உறுப்பினர் என்ற முறையில் இதழை குறித்த நேரத்தில் கொண்டுவருவதில் முழு கவனம் செலுத்தினார். அவரது மரணம், கட்சிக்கும் சமுதாயத்திற்கும் குடும்பத்தினருக்கும் அளப்பரிய இழப்பாகும்.தோழரை நினைவுகூறும் இவ்வேளையில், அவர் எதற்காக அர்ப்பணத் துடன் வாழ்ந்தாரோ அந்நோக்கங்களை உட்கிரகித்துக் கொண்டு கட்சி அமைப்பை வலுப்படுத்தவும் அவரது நற்குணங்களை நம்மில் வளர்த்துக் கொள்ளவும் உறுதியேற்போமாக ■

**தோழர் புகழேந்தி அவர்களுக்கு செவ்வணக்கம்!**

**பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷுக்கு செவ்வணக்கம்!**

**முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சி ஓங்குக!**

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on : 25th to 31st
Publication: First week of Every Month

பாட்டாளி சிந்தனை
PAATTALI CHINTANAI

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988
TN/CCN/429/2024-2026
TN/PMG(CCR)WPP/373/2024-2026

# தோழர் புகழேந்திக்கு அஞ்சலி



மத்தியக் கமிட்டி உறுப்பினர்
தோழர் ஜெய்சன் ஜோசப் உரை



மாநிலச் செயலாளர்
தோழர் ரெங்கசாமி உரை



சென்னையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டம்



கூட்டத்தில் கலந்துகொண்டோர்

*தோழர் புகழேந்தி அவர்களுக்கு அஞ்சலிக் கூட்டம் சென்னையில் பிப்ரவரி **22** அன்று மாநிலக் கமிட்டியால் நடத்தப்பட்டது. சந்திரபோஸ் என அழைக்கப்படும் தோழர் புகழேந்தி பிப்ரவரி **12** இரவு காலமானார். கூட்டத்திற்கு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் ஆ ரெங்கசாமி தலைமை தாங்கினார். மத்தியக் கமிட்டி உறுப்பினரும் கேரளா மாநிலச் செயலாளருமான தோழர் ஜெய்சன் ஜோசப் சிறப்புரை ஆற்றினார்.*

*முன்னதாக தோழர் புகழேந்தியின் உருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு இரு நிமிட மௌனம் அனுசரிக்கப்பட்டது. பிறகு தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அஞ்சலிச் செய்தி வாசிக்கப்பட்டது. மத்திய பொலிட்பீரோ உறுப்பினர் தோழர் ராதாகிருஷ்ணா, மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் ஸ்ரீதர், அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் (ஏஐகேகேஎம்எஸ்) அகில இந்திய செயலாளர் தோழர் சங்கர் கோஷ், தமிழ்நாட்டிற்கான அகில இந்திய கமிட்டியின் பிரதிநிதி மற்றும் செயற்குழு உறுப்பினர் தோழர் நாகம்மாள் ஆகியோரின் இரங்கல் செய்திகள் வாசிக்கப்பட்டன. பின்பு கீழ்கண்டவாறு ஏனையோர் உரையாற்றினர்.*

## அனைத்து ரத்த உறவுகளையும்விட தோழமை உறவே உன்னதமானது என்பதை வாழ்க்கையில் கடைபிடித்தார் தோழர் புகழேந்தி – தோழர் ஜெய்சன் ஜோசப்

*தோழர் புகழேந்தியின் மறைவு மிகுந்த வருத்தத்தையும் இழப்பையும் உணரவைக்கிறது. சமுதாயத்தின் அடித்தட்டு மக்களான தொழிலாளிகள் விவசாயிகள், ஏழை மக்கள் மீது அவர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார் என்பதை சமீப ஆண்டுகளாக அவருடன் பழக முடிந்த நான் உணர்ந்தேன். பாட்டளி வர்க்கத்தின் விடுதலைக்காக தானும் பங்களிக்க வேண்டும் என அவர் விரும்பி உழைத்தார். தோழர் சிப்தாஸ் கோஷின் போதனைகளே அவருக்கு இந்த உந்துதல் வரக் காரணமாகும்.*

*ஒவ்வொரு சக தோழரிடமும் மனதைப் புண்படுத்தாமலும் முகம் கோணாமலும் அவர் நடந்து கொண்ட விதத்தை நான் பழகிய குறுகிய காலத்திலேயே பார்த்தேன். தோழர் சிப்தாஸ் கோஷின் சிந்தனையால் ஆட்கொள்ளப்பட்ட தோழர்கள் அப்படித்தான் பழகுவார்கள். ஏனெனில் அனைத்து உறவுகளையும் விட தோழமை உறவே உலகில் உன்னத உறவாகும். கேரளாவில் அனில்குமார் என்றொரு இளைய தோழர் நம்மிடையே இருந்தார். தோழர் அனில்குமாருக்கு இரண்டு சிறுநீரகங்களும் (கிட்னி) செயலிழந்து விட்டன. சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்காக உறவினர்களின் ஒரு சிறுநீரகம் தேவைப்பட்டது. அவர்கள் யாருமே கொடுக்க முன்வர இயலவில்லை. ஆனால் நமது தோழர்கள் **42** பேர் முன்வந்தார்கள். பலரும் இதைக் கேள்விப்பட்டு வியந்தனர். உலகில் எல்லா உறவு முறைகளுக்கும் அடித்தளமாக தனிச் சொத்து விளங்குகிறது. அதனாலேயே இன்று, முதலாளித்துவ சமூகத்தில் அன்பு, பாசம், நேசம், கனிவு, ஆதரவு ஆகிய நற்குணங்கள் மறைந்து வருகின்றன. மார்க்சிசம் லெனினிசம் சிப்தாஸ் கோஷ் சிந்தனையின் அடிப்படையிலான சோசலிச உறவு முறையே, உயர்ந்த சமூக நோக்கத்திலான உறவு முறையே உண்மையான அன்பையும் பாசத்தையும் கொடுக்கின்றது. அதனால் தான் தோழர் புகழேந்தி தனது குடும்பத்தினரிடமும் தன்னலமற்ற உண்மையான அன்பை வெளிப்படுத்த முடிந்தது. ஏனெனில் ஒரு தோழர், தனது உறவினர்கள் நண்பர்களுடன் கொண்டிருக்கும் உறவிற்கு கம்யூனிச நெறி மதிப்புகள் வழிகாட்ட வேண்டும். தான் விரும்பும் சமூக விஷயங்களை, போராட்டத்தை, வாழ்க்கை முறையை எனது நண்பர்களும் உறவினர்களும் விரும்பச் செய்யும் போராட்டத்தை புரட்சியாளர் நடத்த வேண்டும். அப்பொழுதுதான் அந்த உறவிற்கான அடிப்படையாக உயர்ந்த மதிப்புக்கள் நீதி நெறிகள் தார்மீக உணர்வுகள் விளங்கும். இப்படிப்பட்ட போராட்டத்தை நாம் அனைவரும் நடத்த வேண்டும். இதுவே, தோழர் புகழேந்தி விரும்பிய கனவுகளை நிறைவேற்ற நாம் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழியாகும் என தோழர் ஜெய்சன் ஜோசப் தனது அஞ்சலி உரையில் குறிப்பிட்டார்.*

## தோழர் புகழேந்தி, தனது நண்பர்கள் உற்றார் உறவினரிடம் உயர்ந்த மதிப்புகளை பிரதிபலித்தார் – தோழர் ரெங்கசாமி

*மாநிலச் செயலாளர் தோழர் ரெங்கசாமி உரையாற்றுகையில், தோழர் புகழேந்தி கட்சி அமைப்பிற்கு வந்த வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டார். அவரது தந்தை சிபிஐ கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினராக இருந்தார். ஆயினும், தோழர் புகழேந்தி சென்னைக்குப் படிக்க வந்த போது, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தோழர்களை நிதி வசூலில் பார்த்த பொழுது, அவர்கள் புலப்படுத்திய கலாச்சாரத்தால் ஈர்க்கப்பட்டு கட்சியிலும் இணைந்தார். நாம் உயர்ந்த கலாச்சாரத்தை உருவாக்க வேண்டும் என்பதற்குத்தான் நாம் சமரசமற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் மனிதநேய பண்புகளை, வாழ்க்கை வரலாற்றை மக்களிடையே பரப்புகின்றோம். மனிதநேயத்தை உயர்ந்த அளவில் கடைபிடித்த பின் கம்யூனிச மதிப்புகளையும் நாம் பிறப்பிக்க முடியும். தோழர் புகழேந்தி, தனது நண்பர்கள் உற்றார் உறவினரிடம் உயர்ந்த மனித நேய மதிப்புகளை பிரதிபலித்தார். இதனால்தான் அவரது உறவினர்களும் கட்சித் தோழர்கள்மீது நன்மதிப்பைக் கொண்டிருந்தனர். தோழர் புகழேந்தி வெளிப்படுத்திய மனித மதிப்புகளை நாமும் கைவரப் பெற்று, அவரது புரட்சிகர இலட்சியத்தை நிறைவேற்ற உறுதி பூணுவதுதான் அவருக்கு நாம் செய்யும் புரட்சிகர அஞ்சலியாகும் என்றார்.*

*தொடர்ந்து மாநிலக் கமிட்டி உறுப்பினர்கள் தோழர் நந்தகுமார், திலகர் உரையாற்றினார்.*

*தோழர் பாலகிருஷ்ணன், எஸ்கேஎம் உரையாற்றுகையில் கோட்பாட்டு ரீதியான முடிவுகளை எடுக்கும் மனிதர் சந்திர போஸ், கூட்டு சிந்தனைக்கு அவர் மிகச் சிறந்த பங்களிப்பை வழங்கினார், உங்களுக்கு அவர் தோழராகத் தான் தெரியும், எனக்கு அவர் சிறந்த மனிதநேயமிக்க மனிதாபிமானியாகத் தெரிந்தார் என ஆழ்ந்த மரியாதையுடன் பதிவு செய்தார்.*

*அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தோழர் சுருளியாண்டவர் உரையாற்றுகையில் சங்கத்தின் மாநிலத் தலைவராக பணியாற்றிய தோழர் புகழேந்தி நம்மிடையே இப்போது இல்லை என்று வருத்தத்துடன் குறிப்பிட்டார். அவரது இடத்தை சங்கத்தில் பூர்த்தி செய்ய நமக்கு எளிதல்ல என்றாலும் அக்கடமையை நிறைவேற்ற நாம் கடுமையாக முயற்சிசெய்வோம், அதுவே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலி என்றார்.*

*கூட்டத்தில் தோழர் புகழேந்தியின் புதல்வி திருமதி புஷ்பா உரையாற்றுகையில், தனது தந்தையின் அமைதியான மனநிலையையும் தங்கள்மீது அவர் கொண்டிருந்த தன்னலமற்ற பாசத்தையும் உருக்கமாகக் குறிப்பிட்டார். தனிப்பட்ட எதிர்ப்பு என்று அவருக்கு எவருமே இருந்ததில்லை, எதிரிகளையும் அன்பால் வெற்றிகொள்ளும் மனப்பான்மையை அவர் கொண்டிருந்ததாக குறிப்பிட்டார். அவரைக் காப்பாற்ற இறுதிவரை அனைத்துவகையிலும் உதவிய தோழர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.*

*தோழர் சிப்தாஸ் கோஷ் மீதான பாடலுடன் அஞ்சலிக் கூட்டம் நிறைவேறியது* ■

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094,* ***ஆசிரியர்: ஆ ரெங்கசாமி***

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**